அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை: 10/2018

எனது இல.F/FR/03/BR Cir.
அரச நிருவாக, முகாமைத்துவ மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு - 07

2018.05.30

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள்,

## <u>அரசாங்க கட்டிடங்களின் வாடகை "20.02.01.01" தொடர்பான வருமான நிலுவை அறிக்கை சமர்ப்பித்தல் - 2018.06.30</u>

அரசாங்க நிதிக்கொள்கைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 01/2015 மற்றும் 2015.07.20 ஆந் திகதிய சுற்றிக்கை மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் தொடர்பாக தாங்கள் கவனம் செலுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

02. அரச நிருவாக, முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சின் செயலாளர், கணக்கீட்டு அலுவலராக பணியாற்றுகின்ற வருமான குறியீட்டிலக்கம் **20.02.01.01** ஐ கொண்ட **அரசாங்க கட்டிடங்களின் வாடகை** வருமானங்களைத் திரட்டும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் / கணக்கீட்டு அலுவலரினால், நி.பி.128(2) (இ) ஏற்பாடுகளின் பிரகாரம் அவ் வருமான குறியீட்டு இலக்கத்துக்குரியதாக ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வருமான நிலுவை தொடர்பான அறிக்கை கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. ஆதலால், **20.02.01.01** ஐக் கொண்ட **அரசாங்க கட்டிடங்களின் வாடகை** வருமானக் குறியீட்டிலக்கத்தின் கீழ் குறித்தொதுக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக பேணப்பட்ட நிலுவை வருமானம் தொடர்பான கணக்கு அறிக்கைகள், பதிவேடுகள் ஆகியன உரியவாறு ஒப்பீடு செய்யப்பட்டு மேலே குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க நிதிக்கொள்கை சுற்றறிக்கை இல. 01/2002 மற்றும் அது தொடர்பான திருத்தத்திற்கமைய இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவ இல .01 இன் பிரகாரம் 2018.**06.30** ஆந் திகதியளவில் சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை வருமான அறிக்கை **2018.07.12** ஆந் திகதிக்கு முன்னர், "buildingrentpubad@gmail.com" எனும் மின்னஞ்சல் முகவரிக்கு மென் பிரதியுடன் இவ் அமைச்சின் "**பிரதான நிதி அலுவலரிடம்**" சமர்ப்பிக்கும் படி தயவுடன் அறியத்தருகின்றேன். குறித்த திகதியில் வருமான நிலுவை எதுவுமின்றேல், அது பற்றி குறிப்பிட்டு வெற்று அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படல்வேண்டும்.

04. மேலும், ஒவ்வொரு ஆண்டுக்குமுரிய வருமான நிலுவைக்கு நேரொத்ததாக 2018 ஆண்டிற்குள் அறவிடப்பட்ட தொகை தொடர்பான விபரம், அக்கால எல்லையினுள் நி.பி.113 இன் பிரகாரம் திறைசேரிடமிருந்து பெறப்பட்ட அங்கீகாரத்தின் படி கைவிடப்பட்ட வருமானம் இருப்பின் அது தொடர்பான விபரமும் உள்ளடங்கலாக இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவம் 02 இற்கமைய சமர்ப்பிக்கப்பட வேண்டும் என மேலும் அறியத்தருகின்றேன்

ஒப்பம் / பத்மசிறி ஜயமான்ன
செயலாளர்,
அரச நிருவாக, முகாமைத்துவ மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு

பிரதிகள் :- 01. கணக்காய்வாளர் அதிபதி
02. பணிப்பாளர் நாயகம், அரசாங்க நிதிக் கொள்கை திணைக்களம்.

## 2018.06.30 ஆந் திகதியளவில் வருமான நிலுவை தொடர்பான அறிக்கை

(i) நியதிச்சட்டம் / அதிகாரம் :- தாபன விதிக்கோவை / காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் / அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 10/2018
(ii) சட்டம் / அதிகாரம் :- அரச நிருவாக, முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.
(iii) வருமான வகை :- அரசாங்க கட்டடங்கள் தொடர்பான வாடகை வருமானம்
(iv) வருமானப் குறியீட்டு இலக்கம்:- 20.02.01.01

| விபரம் (அரசாங்க கட்டிடங்களின் வாடகை வகைப்படுத்தல்) | வருமான நிலுவை | | | | | நிலுவைக் கான கரணம் | நிலுவை அறவீடு தொடர்பாக மேற்கொள் ளப்பட்ட நடவடிக் கைகள் | நிலுவை அறவீடுகளை மீள அறவிடுவது தொடர்பாக |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 31.12.2015 வரையான திரட்டிய நிலுவைத் தொகை ரூபா | 2016ஆண் டிற்கான திரட்டிய நிலுவை தொகை ரூபா | 2017 ஆண்டிற்கா ன திரட்டிய நிலுவை தொகை ரூபா | 2018 ஆண்டிற்கான திரட்டிய நிலுவைதொ கை ரூபா | 30.06.2018 ஆந் திகதி வரையான மொத்த நிலுவைத் தொகை ரூபா (2+3+4+5) | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | *(7) | *(8) | *(9) |
| (i) உத்தியோக பூர்வ வாசஸ்தலம் | | | | | | | | |
| (ii) சுற்றிலா பங்களா மற்றும் விடுமுறை விடுதி( ஏதாவது இருப்பின்) | | | | | | | | |
| (iii) பிற கட்டிடங்கள் | | | | | | | | |

2017.12.31 ஆந் திகதியளவில் சமர்ப்பிக்கப்பட்ட வருமான நிலுவை அறிக்கை மூலம் மேற்படி அட்டவணையின் நிரல் இலக்கம் 2 இருந்து 4 வரை அறிக்கையிடப்பட்ட ஒவ்வொரு வருமான நிலுவைகளிலிருந்தும் 2018 ஆண்டின் முதல் ஆறு மாதம் வரை அறவீடுகள் இருப்பின், அவை கழிக்கப்பட்டதன் பின்னர் கிடைக்கப் பெறும் தொகையுடன் இந் நிரல்களின் கீழ் காட்டப்படும் கூட்டுத்தொகையும் சம்மானதாக இருத்தல் வேண்டும். அவ்வாறின்றேல், குறித்த வித்தியாசங்கள் தொடர்பான விரிவான விளக்கம் இணைப்புக்களாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

* 7,8 மற்றும் 9 ஆம் நிரல்கள் தொடர்பாக செல்லுபடியாகும் திவான விளக்கங்கள் சமர்ப்பிக்கப்படுவது இன்றியமையாததாகும். அதற்காக மாதிரிப்படிவத்திலுள்ள இடவசதிகள் போதாதுவிடின் இணைப்பாக சமர்ப்பிக்கப்படுவது தகுந்ததாகும்.

குறிப்பு - வருமான நிலுவை காண்பிக்கப்படும் போது மேற்படி வகைப்படுத்தலின் கீழ் சமர்ப்பிக்கப்படுவதற்கு அவதானம் செலுத்தவும்.

திகதி- ................................ மெலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவை என உறுதிப்படுத்துகிறேன்

..........................................................................................
செயலாளர்/ திணைக்களத் தலைவர்/ மாவட்டச் செயலாளர்
(உத்தியோபூர்வ முத்திரை)

**<u>2018.06.30 ஆந் திகதியளவில் வருமான நிலுவைகளின் திரட்டல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வருமான விடுவிப்பு ஆகியன பற்றிய கூற்று</u>**

அமைச்சு / திணைக்களம் ..........................  வருமானத் தலைப்பு: **20.02.01.01**

| விபரம் | 2018 ஆண்டிற்கான வருமான நிலுவைத் திரட்டல் | | | | *2018 ஆண்டின் இறுதி ஆறுமாதகால வருமான நிலுவைகளை விடுவித்தல் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (அரசாங்க கட்டிடங்களின் வாடகை வகைப்படுத்தல்) | 31.12.2015 வரையான திரட்டிய நிலுவைத் தொகை ரூபா | 2016ஆண்டிற்கான திரட்டிய நிலுவை தொகை ரூபா | 2017 ஆண்டிற்கான திரட்டிய நிலுவை தொகை ரூபா | நிலுவைத் தொகைக் குரித்தான மொத்த திரட்டல்கள் | 31.12.2015 வரை | | 2016 | | 2017 | | நிலுவைத் தொகைக் குரியதான மொத்த விடுவிப்புக்கள் (6+8+10) |
| | | | | | வருமான நிலுவைக்கு நேரொத்த விடுவித்தல்கள் ரூபா | நி.பி.113 பிரகாரம் விடுவிப்பதற்கான அதிகாரமளிக்கப்பட்ட திறைசேரி கடிதம் மற்றும் திகதி | வருமான நிலுவைக்கு நேரொத்த விடுவித்தல்கள் ரூபா | நி.பி.113 பிரகாரம் விடுவிப்பதற்கான அதிகாரமளிக்கப்பட்ட திறைசேரி கடிதம் மற்றும் திகதி | வருமான நிலுவைக்கு நேரொத்த விடுவித்தல்கள் ரூபா | நி.பி.113 பிரகாரம் விடுவிப்பதற்கான அதிகாரமளிக்கப்பட்ட திறைசேரி கடிதம் மற்றும் திகதி | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
| (iv) உத்தியோக பூர்வ வாசஸ்தலம் | | | | | | | | | | | |
| (v) சுற்றுலா பங்களா மற்றும் விடுமுறை விடுதி (ஏதாவது இருப்பின்) | | | | | | | | | | | |
| (vi) பிற கட்டிடங்கள் | | | | | | | | | | | |

- மேற்படி வருமான குறியீட்டிலக்கத்தின் கீழ்வரும் ஏதேனுமொரு வருமானத்தினை விடுவிப்பதற்காக நி.பி..113 இற்கமைய பொதுத் திறைசேரியின் முன்னனுமதியைப் பெறவேண்டும். ஆதலால் , பொதுத்திறைசேரியினால் (அரசாங்க நிதித் திணைக்களம்) அதிகாரமளிக்கப்பட்ட விடுவிப்புக்களே இதன் கீழ் குறிப்பிடப்படுவதுடன் அது தொடர்பாக அதிகாரமளிக்கப்பட்ட கடிதங்களின் ஒவ்வொரு பிரதியும் இத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

திகதி- ................................  மெலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவை என உறுதிப்படுத்துகிறேன்

........................................................................................

செயலாளர்/ திணைக்களத் தலைவர்/ மாவட்டச் செயலாளர்

(உத்தியோபூர்வ முத்திரை)